முதியோர்களுக்கான தேசிய மன்றம் - 2021

------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முதியோர்களுக்கான தேசிய மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தேசிய மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தேசிய மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தேசிய மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தேசிய மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தேசிய மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தேசிய மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தேசிய மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தேசிய மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தேசிய மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள ரூபா | வானின் பெறுமானத்தேய்விடக்கூடிய பெறுமதி 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்ததுள்ளதுடன் அதன் பெறுமதியை மீள்மதிப்பீடு செய்வதற்கும் 2022 ஆம் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 9,100,000 கிரயமான வான் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில் லை. மேலும் இந்த வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட பிழையை மீண்டும் இணக்கம் செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கான நிதியை செலவு வைப்பதற்கு முதியோர் கொடுப்பனவிலிருந்து பெறப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளுக்கு முரணாக காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக, நிதியம் ஸ்தாபிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை நிலுவையாகவுள்ள ரூபா 75,999,300 பங்களிப்பு தொகை கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது. | 331 பிரதேச செயலகங்களில் இருந்து மாதாந்தம் காசோலைகள் மூலம் கழிக்கப்படும் பணம் அனுப்பப்பட்டுள்ளதுடன், பல்வேறு காரணங்களால் பெறுவனவுகளில் தாமதம் ஏற்பட்டதால் அடுத்த மாதத்தில் அனைத்து பெறுவனவுகளும் கணக்கீடு செய்யப்பட்மாட்டாது. அதிக எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களிடம் இருந்து பணம் பெறுவதால் பங்களிப்பை சரியாக கணிப்பிடுவது கடினமாக உள்ளது. இதன் காரணமாக பண அடிப்படையில் பங்களிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டு முதல் அட்டுறு அடிப்படையில் பங்களிப்புக்கள் கணக்கில் பதிவுசெய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக வெளித் தரப்பினரிடமிருந்து உதவிகள், நன்கொடைகள் மற்றும் பங்களிப்புகளாகப் பெறப்பட்ட ரூபா 253,775 தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்படுவதற்கு பதிலாக மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்களாக நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | இது சர்வதேச முதியோர் தினத்தை கொண்டாடுவதற்காக பெறப்பட்ட உதவிகள் மற்றும் நன்கொடைகளில் இருந்து செலவிடப்பட்டதில் மீதிப்பணமாகும். தேசிய மனறத்தின் அங்கீகாரத்துடன் வரவிருக்கும் முதியோர் தின விழாக்களுக்குப் பயன்படுத்துவதற்காக வைப்புக் கணக்கில் இச் சேமிப்பு தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ளது. | மானியங்கள், நன்கொடைகள் மற்றும் பங்களிப்புக்கள் வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமூக பாதுகாப்பு நிதியத்தின் வங்கிக் கணக்கிற்கு பெறப்பட்ட ரூபா 48,337,714 வைப்புத் தொகை இனங்காணப்பட்டு நிதியத்தின் மீதிக்குச் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நிதிய மீதியானது நிதிக்கூற்றுக்களில் மேற்படி தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக தபால் சேவைகள் தாமதமாகி வருவதால், பல பிரதேச செயலகங்கள் சமூக பாதுகாப்பு நிதியத்தின் பங்களிப்புக்களை வங்கி நடைமுறைக் கணக்குகளில் நேரடியாக வைப்பிலிட்டுள்ளன. வைப்புச் சீட்டுகள் முறையாக அனுப்பப்படாததால், அந்த வைப்புக்களை கணக்குகளிற்கு எடுத்துக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. உடனடியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட பங்களிப்புக்கள் இனங்காணப்பட்டு, கணக்கீடு செய்யப்பட்டு வைப்பு மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய மன்றத்தின் செயற்பாடுகளுக்காக பொது திறைசேரியில் இருந்து பெறப்பட்ட ரூபா 7 மில்லியன் திறைசேரி மானியத்தை நிதிக்கூற்றுக்களில் வருமானமாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக மீளாய்வாண்டில் தேசிய மன்றத்தின் பற்றாக்குறை மேற்படி தொகையால் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டுகளில் தேசிய மன்றத்தின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 7,563,822 நானாவித பெறுவனவுகள் நிதிக்கூற்றுக்களில் வருமானமாக இனங்காணப்பட்டுக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இதில், 48 வைப்புக்களின் ரூபா 7,289,771 தொகை இதுவரை கணக்கீடு செய்யப்பட்டதுடன் மீதமுள்ளவற்றின் நடவடிக்கைகளுக்காக வைப்பு செய்யப்பட்ட வங்கிக் கிளைகளில் இருந்து தகவல் கோரப்பட்டுள்ளது. ரூபா 7 மில்லியன் திறைசேரி பெறுவனவு வைப்புக்களின் மொத்த பெறுமதி ஏற்கனவே கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நிதியத்தின் வருமானத்தை முறையாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட 19 காசோலைகள் தொடர்பான ரூபா 7,283,922 பெறுமதி ஒரு வருடத்திற்கும் மேலாக தேறாததால் கடன் மீதிகளிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கடன்பட்டோர் மீதிகள் மேற்படி தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | தேறாத வைப்பாக காட்டப்பட்ட அனைத்து விடயங்களினதும் தவறுகளை திருத்தம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | சரியான நேரத்தில் தேறாத காசோலைகளின் பெறுமதியை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்: | | | | |
| (i) | நி.பி. 395(இ) | ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கி நடைமுறைக் கணக்குகளின் கொடுக்கல்வாங்கல் நிலைமைகள் குறித்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நடைமுறைக் கணக்குகள் மூலம் செய்யப்படும் கொடுக்கல்வாங்கல்களில் உள்ள பிழைகள் மற்றும் மோசடிகளை வெளிக்கொணர்வதற்கு நீண்ட காலம் எடுக்கிறது என்பது அவதானிக்கப்பட்டது. | கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக உத்தியோகத்தர்களை அலுவலகங்களுக்கு அழைத்து வருவதில் உள்ள சிரமங்களாலும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அதிகளவில் பணி வழங்கப்படுவதாலும் சில மாதங்களில் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும், 2022 சனவரி முதல் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வங்கி கணக்கிணக்கங்களைத் தயாரிக்கும் பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கான பணிகள் திட்டமிடப்பட்ட திகதிக்கு முன்னரே செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 395 (ஏ) | சேகரிக்கப்பட்ட பணத்தை வங்கியில் வைப்புச் செய்தல், காசோலைகளை எழுதுதல் அல்லது காசுப் புத்தகத்தை வைத்திருத்தல் போன்ற பணம் தொடர்பான நடவடிக்கைகளில் பங்கேற்காத உத்தியோகத்தர் ஒருவரால் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த நடைமுறைக் | கணக்குப் பிரிவின் செயற்பாடுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, உத்தியோகத்தர்களிற்கு இடையே பணி முறையாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளதால் 2022 சனவரியில் இருந்து நிதிப் பணிகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர் ஒருவரால் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது, | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்கின் காசு தொடர்பான நடவடிக்கைகளைச் செய்திருந்த உத்தியோகத்தரிற்கு ஒரு வங்கிக் கணக்கு தொடர்பான வங்கி கணக்கிணக்கத்தை தயாரிப்பதற்கு பணி ஒதுக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | நி.பி. 396(ஈ) | காலாவதியான காசோலைகள் இரத்து செய்யப்பட்டு, பணம் செலுத்த வேண்டியவை எனக் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 06 மாதங்களில் காலாவதியான ரூபா 509,885 தொகையான 33 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகளிற்காக காசோலைகளை சமர்ப்பிக்காதமை அந்தந்த பணம் பெறுபவர்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டு, பெறப்பட்ட பதில்களின் அடிப்படையில் காசோலைகளின் திகதிகள் நீட்டிக்கப்பட்டு, பதில் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. பதில் வராத காசோலைகள் இரத்து செய்யப்பட்டு, அரசாங்க வருமானத்திற்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. | -மேற்படி- |

**1.7 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முதியோர் பாதுகாப்பு நிதியத்திற்கு பெறப்பட்ட பங்களிப்பு பணத்திலிருந்து முதியோர்களுக்கு நலன்களை வழங்குவதற்கு ரூபா 355,846,655 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை, மேலும் அரசாங்க மானியமாகப் பெறப்பட்ட ரூபா 7,572,048 மேலதிக தொகை ஒவ்வொரு ஆண்டும் பயன்படுத்தப்படாமல், வங்கி நடைமுறைக் கணக்கில் இடப்பட்டது. 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் 21 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க தேசிய மன்றத்தால் தீர்மானிக்கப்படும் வகையில் குறித்த மிகைப் பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி நடைமுறைக் கணக்கின் மீதியில் ரூபா 5 மில்லியனுக்கும் அதிகமான தொகை, அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் விதவைகள்/ தபுதாரர் மற்றும் அனாதைகள் நிதியித்திடமிருந்து கழிக்கப்பட்ட பணம் மற்றும் ஏனைய வைப்புக் கணக்குகளில் இருந்து நிறுத்திவைக்கப்பட்ட பணம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. செலவினங்களை மேற்கொள்வதற்கு அவற்றை விரைவாக தீர்ப்பனவு செய்ய வேண்டியுள்ளதால் பணத்தை முதலீடு செய்ய முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | வங்கி நடைமுறை கணக்குகளில் உள்ள மிகைப் பணத்தை செயற்திறனாக முதலீடு செய்வதன் மூலம் தேசிய மன்றத்தின் நிதி வலிமை அதிகரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 841,077 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,874,301 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 11,033,224 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அரசாங்க மானியம் ரூபா 7,205,000 ஆல் அதிகரித்தமை மற்றும் பதவியணி கிரயங்கள், ஒப்பந்த சேவை கிரயம் என்பன ரூபா 17,016,397 ஆல் அதிகரித்தமை மற்றும் முதியோர் நலன் நிகழ்ச்சித்திட்ட கிரயம், பராமரிப்பு கிரயங்கள் என்பன ரூபா 19,930,129 ஆல் குறைவடைந்தமை என்பன இந்த முன்னேற்றத்திற்கான காரணங்கள் ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ செயற்றாதிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுதந்திரம், பாதுகாப்பு, சுயமரியாதை, பங்கேற்பு, கண்ணியம் உரிமை பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்திற்காக தேசிய அளவில் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு வசதியாக, பயனுள்ள முடிவுகள் மற்றும் பொருளாதார நிலை, சுகாதார நிலை, வயது அமைப்பு, மாவட்ட வாரியாக முதியோர் எண்ணிக்கையை வழங்குதல் ஆகியவற்றைக் கண்டறிந்து சமத்துவத்துடன் வெளிப்படையான மற்றும் முறையான முறையில் நன்மைகளை வழங்குவதை எளிதாக்குகிற வகையில் 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முதியோர் சமூகத்தின் தகவல்களை உள்ளடக்கிய தரவுத் தளத்தைத் தயாரிப்பதற்குப் போதுமான மற்றும் பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முதியோர் தரவு தகவல் முகாமைத்துவ முறைமை தற்போது 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய முதியோர்களின் தரவுகளை உள்ளடக்கி இது www.srilankaelderscare.gov.lk என்ற இணையத்தள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. | முதியோர் சமூகத்தின் தகவல்களை உள்ளடக்கிய முழுமையான தரவு முறைமையைத் தயாரித்தல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பாதுகாப்பு, சுயமரியாதை, கண்ணியத்தைப் பாதுகாத்தல் போன்ற முக்கிய பணிகள் செயற்படுத்தும் | 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பின்தொடர் | முதியோர் நலன் சார்ந்த செயற்பாடுகளின் செயற்திறனான செயலாற்றலை மதிப்பீடு செய்து |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் மூலம் செயற்திறனாக நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதை மதிப்பிடுவதற்கும் பின்தொடர்வதற்கும் உரிய நடைமுறைகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவதில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பின்தொடர்வதற்கான நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 5,795,000 தொகையான கொள்வனவு பெறுமதியுடைய பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்தப்பட்ட மோட்டார் கார் பணிப்பாளரே வாகனம் ஓட்டும் போது விபத்துக்குள்ளானதுடன் வாகனத்தின் முன் பக்கம் முற்றிலும் சேதமடைந்தது. விபத்து இடம்பெற்று ஏறக்குறைய ஒரு வருடம் கடந்துள்ள போதிலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி. 104 (3) இன் பிரகாரம் விபத்து பற்றிய தகவல்கள் உட்பட பூர்வாங்க அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குறிப்பாக நட்டத்தின் பெறுமதியை கணிப்பிடுவதற்கும் பொறுப்பான தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஒரு உத்தியோகபூர்வ வாகனம் பணிப்பாளரிற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய வாகனம் ஓட்டும் போது விபத்துக்குள்ளானது. நி.பி. 104 இன் பரீட்சிப்பு அமைச்சால் நியமிக்கப்பட்ட குழுவால் நடத்தப்படுகிறது. மோசமான பொருளாதார நிலைமை காரணமாக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் கடினமாக இருந்ததால் பழுதுபார்ப்பதற்கான மதிப்பீடு தயாரிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. தற்சமயம் மதிப்பீடு ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோ. லிமிட்டட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென்றும், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோ. லிமிட்டட்டின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர், பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு வாகனத்தை இயக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | விபத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கும் பொறுப்பான தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்தை ஸ்தாபிப்பதற்கும் நடத்துவதற்கும் 2016 ஆகஸ்ட் 30 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற போதிலும், நிதிப்பிரமாணம் 876(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று பாராளுமன்ற சட்டத்தின் | முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்தை ஸ்தாபிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் முதியோர் கொடுப்பனவுகளைப் பெறும் பயனாளிகளிடமிருந்து ஒவ்வொன்றும் ரூபா 100 தொகையைப் பெற்று நிதியத்திற்கு பங்களிப்புச் சேகரிக்கப்படுகிறது. முதியோர் கொடுப்பனவுகளின் | முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்று பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வத்தை உருவாக்கவும், நிதியத்திற்கு சேகரிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| ஊடாக சட்டபூர்வத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2016 ஆகஸ்ட் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் ரூபா 2,826.20 மில்லியன் தொகை காணப்பட்ட போதிலும் அமைச்சரவை அங்கீகாரம் இல்லாத போதிலும் 2016 சனவரி முதல் யூலை வரையிலான காலப்பகுதியில் ரூபா 308.86 மில்லியன் தொகை நிதியத்திற்கு அறவிடப்பட்டிருந்தது. 2016-2018 காலப்பகுதியில் ரூபா 1,384.27 மில்லியன் தொகையும் 2019-2021 இல் ரூபா 1441.93 மில்லியன் தொகையும் நிதியத்திற்கு சேகரிக்கப்பட்டிருந்தன. 03 ஆண்டுகளுக்கும் மேலாக நிதியத்தின் செயற்பாடுகளுக்கு நிதி பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் இரண்டாம் ஆண்டில் ரூபா 573.32 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டது. அதன் வருடாந்த சதவீதம் 59 சதவீதம், 26 சதவீதம் மற்றும் 32 சதவீதமாக காணப்பட்டன. | பயனாளிகளின் தொகையின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இறப்பு, வசிப்பிட மாற்றம் போன்றவற்றின் காரணமாக உண்மையில் செலுத்தப்படும் தொகை மாறுபடும். நிதியம் 2016 இல் தொடங்கப்பட்டதுடன் 2019 இன் பிற்பகுதியில் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிலவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வது கடினமாக இருந்தது. மிகை நிதியை முதலீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | தொகையை நிதியத்தின் செயற்பாடுகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்றாதிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் முதியோர் சமூகத்தின் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்காக 700 சுகாதார உதவி உபகரணங்களை வழங்குவதற்கு ரூபா 13.5 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் பெறப்பட்டிருந்த போதிலும் 419 செவிப்புலன் கருவிகள் மாத்திரடுமே ரூபா 7.5 மில்லியன் தொகையை பயன்படுத்தி வழங்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் 1000 செவிப்புலன் கருவிகளை வழங்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கொவிட் தொற்றுநோய் காரணமாக பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் அளவு குறைவடைந்துள்ளது. எனவே இலக்கிடப்பட்ட பயனாளிகளுக்கு செவிப்புலன் கருவிகளை வழங்குவது கடினமாக இருந்தது. கொவிட் தொற்றுநோய் காரணமாக பயனாளிகள் இல்லாததன் விளைவாக, 2020 ஆம் | மன்ற அலுவலகத்தின் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டுடன் தொடர்புடைய 295 பயனாளிகளுக்கு 2021 ஆம் ஆண்டில் 295 செவிப்புலன் கருவிகள் வழங்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் 419 செவிப்புலன் கருவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | முதியோர் நலன் சார்பாக 2016 ஆம் ஆண்டு முதல் பல்வேறு துறைகளின் கீழ் 10 அடிப்படைச் செயற்பாடுகள் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் முதியோர் பாதுகாப்பு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு, மீளாய்வாண்டு வரை, அந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றம் மோசமான நிலையில் காணப்பட்டது. முதியோர்கள் சார்பில் சுயதொழில் மானியம் வழங்குதல், அதன் மூலம் அவர்கள் உற்பத்தி செய்யும் செயற்திட்டங்களை விற்பனை செய்வதற்கு வசதி செய்து தருதல், அவர்களை தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குதல், முதியோர் பகல்நேர பராமரிப்பு நிலையத்தைத் அமைத்தல் போன்ற செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கொவிட் தொற்றுநோய் காரணமாக. சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் களங்களுக்குச் செல்ல முடியாததாலும், ஊழியர்களை அலுவலகங்களுக்கு அழைப்பது கட்டுப்படுத்தப்பட்டதாலும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதில் சிரமம் இருந்தது. இந்த சூழ்நிலையின் அடிப்படையில், திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மீண்டும் திருத்தப்பட வேண்டியிருந்தது. | நிதியதின் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை அடைந்துகொள்வதற்கான செயற்திட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் முதியோர் நலன்களை வழங்கும் நடவடிக்கைகள் திறமையாக செய்யப்பட வேண்டும். |
| (இ) | 70 வயதுக்கு மேற்பட்ட சட்ட வருமான சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூபா 2,000 மாதாந்த படி தொடர்பான கொடுப்பனவிற்கு பயனாளிகளின் தகவல்கள் அடங்கிய ஆவணத்தை பிரதேச செயலாளர்களிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால், அதன் சரியான தன்மையை பரீட்சித்து படிகளை செலுத்துதல், உரிய தகவல்களை உள்ளடக்கிய தரவுத்தளத்தை தயாரித்தல் மற்றும் அதனை புதுப்பிக்கப்பட்ட முறையில் பேணுதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, மேலும், ஒவ்வொரு மாதமும் முடிந்த பின்னர் அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் படிக் கொடுப்பனவுகள் பற்றிய | பயனாளிகளின் தொகை உள்ளிட்ட ஆவணம், பிரதேச செயலக மட்டத்தில் மாவட்ட செயலகங்களில் சமர்ப்பிக்கப்படுகிறதுடன் பயனாளிகளின் தகவல்கள் அடங்கிய ஆவணம் வழங்கப்படுவதில்லை. மீதமுள்ள செலுத்தப்படாத உதவித்தொகை கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட அதே மாதத்தில் பெறப்படாமல் தொடர்ந்துவரும் மாதத்தில் பெறப்படுவதால் அறிக்கைகளில் சில முரண்பாடுகள் இருப்பது தெளிவாகிறது. மிகுதி செலுத்தப்படாத படிகள் மீளப் பெற்றுக்கொள்ளப்படும் போது, அதே மாதத்தில் | படிகளை செலுத்தும் போது ஏற்படும் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கு சரியான கட்டுப்பாட்டுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

தகவல்களை உள்ளடக்கிய சுருக்கமான செலவின அறிக்கையைப் பெற்று படிக் கொடுப்பனவுகளை பின்தொடர்வதற்கு மன்றத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயனாளிகள் பற்றிய தரவுகளை சேகரிப்பது வயதுவந்தோர் விவகாரங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களால் அளவு ரீதியாகவும் திறம்படவும் செய்யப்படவில்லை. இது தொடர்பில் முதியோர்களுக்கான தேசிய மன்றம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

முதியோர் படிகளை செலுத்துதல் மீதான கட்டுப்பாடு போதுமானதாக இருக்காததாலும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததாலும் கொழும்பு மாவட்டத்தின் மஹரகம மற்றும் கடுவெல பிரதேச செயலகப் பிரிவுகளில் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 476,000 நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக கணக்காய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளின் பிரகாரம் மாவட்ட செயலகங்கள் ஊடாக மாதாந்த பொழிப்புக்களை தயாரித்து தரவுத்தளத்தில் தகவல்களை உள்ளிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் தொற்றுநோய் காரணமாக மாவட்டச் செயலகங்கள் மூலம் விபரமான அறிக்கை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதையும், எதிர்காலத்தில் அறிக்கைகளை முறையாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

### 3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்தின் கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள சிரமங்கள் மற்றும் வாகனங்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களை சுட்டிக்காட்டி அலுவலக கடமைகளுக்காக கோரப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சிற்கு சொந்தமான, பழுதுபார்க்கப்பட்டு வரும் ஒரு Montero ஜீப் முன்னாள் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாகனமாக, அமைச்சின் இயங்கும் காலப்பகுதியில் செய்யப்பட்ட பழுதுபார்ப்புகளுக்காக முறைசாரா முறையில் ரூபா 1,585,521 செலுத்தி இயக்கப்பட்டது. பழுதுபார்ப்பு செலவினத்தில், தேசிய பேரவையின் அங்கீகாரமின்றி, முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்தில் இருந்து ரூபா 1,093,823 செலுத்தப்பட்டதுடன் தேசிய மன்றத்தின் அங்கீகாரம் பெறப்படாததால், முதியோர் மன்ற நிதியத்திலிருந்து ரூபா 1,093,823 தொகை முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு திரும்ப செலுத்தப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் பணிப்பாளர் இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர், அமைச்சின் வேண்டுகோளின் பிரகாரம் ஜீப் 2020 திசெம்பர் 10 இல் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. ஏற்பட்ட பழுதுபார்ப்புச் செலவை ஈடுசெய்யவோ அல்லது செலவிடப்பட்ட பழுதுபார்ப்புச் செலவினத்தை ஈடுசெய்யவோ ஜீப்பை ஓட்டுவதற்கு போதுமான அளவு தக்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படாததால் ரூபா 1,585,521 நட்டம் ஏற்பட்டது. ஏறக்குறைய 02 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை ஈடுசெய்ய முடியவில்லை. | பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பழுதுபார்ப்பதற்காக ஏற்பட்ட ரூபா 1,585,521 தொகை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டு, அப்போதைய பணிப்பாளரின் பயன்பாட்டிற்காக ஜீப் கையகப்படுத்தப்பட்டது. வாகனத்தின் பழுதுபார்ப்புச் செலவினத்தில், முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் ரூபா 1,093,823 தொகை செலுத்தப்பட்டு, மன்றத்தின அறிவுறுத்தலின் பிரகாரம் ரூபா 1,093,823 தொகையான திறைசேரி ஒதுக்கீடுகள் முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளன. கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகங்கள் உத்தியோகபூர்வ கடமைகளுக்கு திறக்கப்படாது, குழாம் வாகனங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாகனங்களை இயக்குவது குறைக்கப்பட்டது. அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், செலுத்தப்பட்ட தொகையை அறவிடுவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. | பழுதுபார்ப்பதற்காக ஏற்பட்ட தொகையை அமைச்சிடம் இருந்து அறவிடுவதற்கும் நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 குறைப்பயன்பாடுடைய நிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய கொள்கைகளை வகுப்பதற்கு, 2016 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீட்டு நிதியேற்பாடுகளின் அடிப்படையில் ரூபா 4,245,807 தொகை வழங்கப்பட்டு, அதில் இருந்து ரூபா 2,438,715 தொகை அனுப்பப்பட்ட போதிலும், தேசிய கொள்கைகளை வகுப்பதற்கான நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீதித் தொகையான ரூபா 1,807,092 பொது வைப்புக் கணக்கில் சுமார் 05 ஆண்டுகளாக விளைவற்று இருந்தது. | மூத்த குடிமக்களுக்கான தேசியக் கொள்கையை உருவாக்குவது தொடர்பான நடவடிக்கைகள் இன்னும் முடிவடையாததால், அதற்குத் தேவையான தொகை பொது வைப்புக் கணக்கில் சேமிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | தேசிய கொள்கையை உருவாக்குதல் மற்றும் தேசியக் கொள்கையை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றின் மோசமான செயலாற்றலை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 925 மாற்றுத்திறனாளிகளுக்கு நடைபயிற்சி கைத்தடி, வோக்கர், கொமேட், சக்கர நாற்காலிகள் மற்றும் ஊன்றுகோல் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகளை வழங்குவதற்கு ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகளை கொள்வனவு செய்வதற்கான நீண்ட கால தாமதம் காரணமாக, மேற்படி பெறுகை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது இடைநிறுத்தப்பட்டு 2022 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டது. | மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகளை வாங்குவதற்கான பெறுகை நடைமுறை சரியான முறையில் தொடங்கப்பட்ட போதிலும் கொவிட் தொற்றுநோய் காரணமாக ஊழியர்களை அலுவலகங்களுக்கு அழைப்பதை கட்டுப்படுத்தியமை மற்றும் நாடு பூட்டப்பட்டமை ஆகியன பெறுகை செயன்முறையில் தாமதத்தை ஏற்படுத்தியது. ரூபாய்க்கு நிகரான டொலரின் விரைவான உயர்வு மற்றும் இறக்குமதியை கட்டுப்படுத்தியதன் காரணமாக, உபகரணங்களை வழங்க முடியாது என வழங்கலை செய்யும் நிறுவனம் அறிவித்ததால், தேசிய மன்றத்தின் கொள்வனவு நிறுத்தப்பட்டது. | பெறுகையை சீரமைத்து செயற்திட்ட செயற்பாடுகளை செயற்திறனாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 129 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணியினர் 117 ஆக காணப்பட்டது. மேலும் சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப பிரிவுகள் தொடர்பாக 12 வெற்றிடங்கள் காணப்பட்டன. பணிப்பள்ர், உதவி பணிப்பாளர் (அபிவிருத்தி), உதவி பணிப்பாளர் (நிர்வாகம்), கணக்காளர், சட்ட உத்தியோகத்தர், உதவி பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) என சிரேஷ்ட நிலையில் 06 பதவி வெற்றிடங்களும் மூன்றாம் நிலையில் நிர்வாக உத்தியோகத்தர் பதவி என்பன வெற்றிடமாக இருந்தன. கூட்டிணைக்கப்பட்ட திகதியிலிருந்து 21 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2000 ஆம் ஆண்டில், அந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பணிப்பாளர் மற்றும் கணக்காளர் ஆகிய இரண்டு பதவிகளுக்கும் பணி நியமனத்தின் கீழும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு பதில் கடமையின் கீழ் தற்காலிகமாகவும் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றதுடன் சிரேஷ்ட நிலை பதவிகளில் உள்ள அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் நிறுவனத்தின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துவதை மோசமாக பாதித்திருந்தன்ளன. | ஆட்சேர்ப்பு திட்டம் 2011 சனவரி 28 இல் அங்கீகரிக்கப்பட்டதுடன் 2020 யூலை 22 இல் உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கும், 2021 சனவரி 29 இல் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கும், 2017 சனவரி 31 இல் உதவி பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. பணிக்கமர்த்தல், பதிற்கடமை அல்லது மேவுகை செய்தல் அடிப்படையில் அந்த பதவிகளுக்கு அவ்வப்போது வரிசை அமைச்சால் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. 2009 ஒக்தோபர் 22 இல் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கும், 2011 சனவரி 28 இல் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கும் அங்கீகாரம் பெறப்பட்டது. அந்த பதவிக்கு பதிற்கடமை நியமனம் செய்யப்பட்டுள்ளது.<br>சுற்றறிக்கை இல. 02/2020 ஆல் ஆட்சேர்ப்பு கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக, அந்த ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டிருக்காததுடன் ஆட்சேர்ப்புக்களுக்கு அரசாங்க அங்கீகாரம் பெற்ற பின்னர் அந்த பதவிகளுக்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். | சிரேஷ்ட நிலைப் பதவிகளில் நீண்டகாலமாக நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மன்றத்தின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை முறைப்படுத்தி முறைமைப்படுத்துவ தற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலக்கிடப்பட்ட முடிவுகளை அடைந்துகொள்ளுதல், நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல் மற்றும் நடைமுறைகள் மற்றும் கொள்கைகளின் சரியான தன்மை ஆகியவற்றின் மூலம் புதுமையான அணுகுமுறைகள், சுதந்திரப் பாதுகாப்பு, சுய-பாதுகாப்பை சான்றழித்தல், பங்கேற்பின் சுய பாதுகாப்பு மற்றும் இலக்கிடப்பட்ட சமூகத்தின் பெருமை என்பன தொடர்பாக அவசர திறமையான மற்றும் பயனுள்ள கொள்கைகளை உருவாக்குவதை உறுதிப்படுத்துவதற்கு போதுமான உள்ளக கட்டுப்பாட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவில் ஒரு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மாத்திரமே பணிபுரிகிறார், மேலும் அவர் மற்றொரு துறையில் பணிபுரியும் போது இந்த பிரிவில் பணிபுரிகிறார். கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | மன்றத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பின்பற்றப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் சரியான தன்மை, செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் செயலாற்றல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வு நடவடிக்கைகள் போதுமான அளவு பூர்த்தி செய்யப்பட வேண்டும். |